இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டம்

---

[1982, சனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1982, சனவரி மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 தபாற் செலவு : சதம் 75

# 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டம்

[1982, சனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 89/80
1410

**இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவையைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கெனவும், அச்சேவையை அபிவிருத்திசெய்து, விரிவாக்கஞ்செய்து, சீர்திருத்துவதற்கெனவும், இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தைத் தாபிப்பதற்கும்; அத்துடன், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டமானது, 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய, இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தைத் தாபித்தலும் அதன் அமைப்பும்

இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தைத் தாபித்தல்.

2. (1) இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் என்று அழைக்கப்படவேண்டிய கூட்டுத்தாபனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறு வழியுரிமையையும், பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன், அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.

கூட்டுத்தாபனத்தின் அமைப்பு.

3. (1) கூட்டுத்தாபனமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தொலைக்காட்சிப் பொறியியலில் அல்லது வேறு வகைசார் பொறியியலில், அல்லது சட்டம் அல்லது நிதி எனும் கருமங்களில், அல்லது நிருவாகத்தில், அல்லது தொழில் உறவுகளில், அல்லது ஒலிபரப்பு, பொதுசனச் செய்தித் தொடர்புத்துறையில் பரந்த அனுபவம், தகுதி, நன்மதிப்பு உடையவர்களென அமைச்சருக்குத் தோன்றுவோரான, அத்தகைய அமைச்சரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் நால்வர்;

(ஆ) அப்போதைக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாயிருப்பவரான அமைச்சரால் நியமிக்கப்படும், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியாக இருக்கவேண்டிய உறுப்பினர் ஒருவர் ;

(இ) அப்போதைக்குத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாயிருப்பவரான அமைச்சரால் நியமிக்கப்படும், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியாக இருக்கவேண்டிய உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(ஈ) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சினது பிரதிநிதியாக இருக்கவேண்டிய, அத்தகைய அமைச்சரால் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்.

(2) அமைச்சரானவர் கூட்டுத்தாபனத்தின் தவிசாளராக இருப்பதற்கென உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பின் ; அல்லது

(ஆ) கூட்டுத்தாபனத்தால் அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமெதன்கீழும், ஏதேனும் கம்பெனியில் (பணிப்பாளர் தவிர்ந்த) பங்குதாரரொருவராகவல்லாது நேரடியாக அல்லது நேரடியாகவன்றி, தாமே, அல்லது தம்சார்பில் அல்லது தம் பயன்பாட்டுக்கென அல்லது நலனுக்கென எவரேனும் வேறு ஆள் மூலம், ஏதேனும் உரிமையை அல்லது நலனைக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்தால் ; அல்லது

(இ) கூட்டுத்தாபனத்துக்கெனச் செய்துகொள்ளப்படும் ஏதேனும் வேலையில் அல்லது அதிலிருந்து, ஏதேனும் கம்பெனியில் (பணிப்பாளர் தவிர்ந்த) பங்குதாரரொருவராகவல்லாது, நேரடியாக அல்லது நேரடியாகவன்றி, தாமே அல்லது தம்சார்பில் வேறு எவரேனும் ஆள்மூலம், ஏதேனும் உரிமையை அல்லது நலனைக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்தால் ; அல்லது

(ஈ) தொலைக்காட்சி ஒளிபரப்பில் அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பில், சந்தைப்படுத்தலில் அல்லது விநியோகத்தில், ஏதேனும் கம்பெனியில் (பணிப்பாளர் தவிர்ந்த) பங்குதாரரொருவராகவல்லாது, நேரடியாக அல்லது நேரடியாகவன்றி, தாமே அல்லது தம்சார்பில் வேறு எவரேனும் ஆள்மூலம் ஈடுபட்டிருந்தால்,

கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு, அல்லது உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்கு அவர் தகைமையற்றவராதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவர், கூட்டுத்தாபனத்துடன் ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருக்கும், அல்லது கூட்டுத்தாபனத்துக்காக ஏதேனும் வேலையைச் செய்கின்ற ஏதேனும் கம்பெனியில் (பணிப்பாளர் ஒருவராகவன்றி) பங்குதாரரொருவராக இருக்குமிடத்து, அத்தகைய கம்பெனியில் அவரால் வைத்திருக்கப்படும் பங்குகளின் தன்மையையும் அளவையும் அமைச்சருக்கு அவர் வெளிவிடுதல் வேண்டும்.

(5) உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பு, பதவிதுறத்தல் அல்லது பதவியினின்று அகற்றப்படுதல் என்பவற்ருல், பதவியை முன்னராகவே வறிதாக்கினுலொழிய நான்காண்டுகள் கொண்டவொரு காலத்துக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியினின்று அகற்றப்பட்டாலன்றி மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(6) எவரேனும் உறுப்பினர் இறந்துபோகும் சந்தர்ப்பத்தில் அல்லது அவர் பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது பதவியினின்று அகற்றப்படும் சந்தர்ப்பத்தில், அமைச்சரானவர், அவரது இடத்துக்கு இன்னேர் ஆளை நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரது இடத்துக்கு நியமிக்கப்பட்டவரான எவரேனும் ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்ருரோ அவ்வுறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுருதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(7) கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் உடல்நலமின்மை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர் இன்னேர் ஆளை நியமிக்கலாம்.

(8) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினுல் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அதற்கான காரணம் எதுவும் காட்டாது உறுப்பினர் எவரையும் பதவியினின்று அகற்றலாம்; அத்துடன் அத்தகைய அகற்றுகையெதுவும் எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(9) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான கடிதம் மூலம் அவரது பதவியை எந்நேரத்திலும் துறக்கலாம்.

(10) கூட்டுத்தாபனத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்கள் மத்தியில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும், அல்லது அதன் உறுப்பினரொருவரது நியமனத்தில் ஏதேனும் ஒழுங்கீனம் இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

(11) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்கள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண், அத்துடன் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை என்பன தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

**கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கான ஊதியம்.**

4. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாருன அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

5. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் கட்டுக்காப்பில் இருந்துவருதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றஞ்செய்யப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தவிசாளரினதும் அல்லது அவர் சார்பில் ஒப்பமிடுவதற்கென கூட்டுத்தாபனத்தால் அதிகாரமளிக்கப்பட்டவரான கூட்டுத்தாபன உறுப்பினரொருவரினதும், கூட்டுத்தாபனப் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் அல்லது அவர் சார்பில் செயற்படுவதற்கென கூட்டுத்தாபனத்தால் அதிகாரமளிக்கப்பட்டவரான கூட்டுத்தாபன அலுவலர் ஒருவரினதும் சமூகத்தில் தவிர, சாசனத்திலும் பொறிக்கப்படுதலாகாது.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களைக் கையளித்தல்.

6. (1) கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை கூட்டுத்தாபனமானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம்.

(2) அத்தகைய கையளிப்பு எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனமானது அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை, அல்லது பணியை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

## பாகம் II

### கூட்டுத்தாபனத்தின் பணிகளும், தத்துவங்களும், கடமைகளும்

கூட்டுத்தாபனத்தின் பணிகள்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் பணிகளானவை—

(அ) இலங்கையுள் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவையொன்றைக் கொண்டுநடாத்துதல், அத்துடன், பொதுமக்கள் நலன்கருதி அச்சேவையை மேம்படுத்தல், அபிவிருத்திசெய்தல், அத்துடன் நிகழ்சித் தயாரிப்பில் உயர்தராதரங்களைப் பேணுதல் ;

(ஆ) ஒளிபரப்புவதற்கென தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தலில் ஈடுபட்டுள்ள ஆட்களைப் பதிவுசெய்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தால் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின்மீது கண்காணிப்பும் கட்டுப்பாடும் பிரயோகித்தல் ;

(ஈ) ஏற்றுமதி செய்வதற்கென தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் வெளிநாட்டைச் சேர்ந்த தொலைக்காட்சி ஆளணியினர்மீதும், வேறு தொலைக்காட்சி ஆளணியினர்மீதும் கண்காணிப்பும் கட்டுப்பாடும் பிரயோகித்தல் ;

(உ) ஒளிப்பதிவு நாடாக்களைப் பயன்படுத்துதல்மீதும், ஏற்றுமதிக்கென அத்தகைய ஒளிப்பதிவு நாடாக்களில் நிகழ்ச்சிக் கருவூலங்களைத் தயாரித்தல்மீதும், கண்காணிப்பும், கட்டுப்பாடும் பிரயோகித்தல் ;

(ஊ) தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடர்பான கருமங்கள் தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்; அத்துடன்

(எ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதற்கு வழங்கப் பட்டவையான அல்லது அதன்மீது சுமத்தப்பட்டவையான தொலைக்காட்சி ஒலிபரப்பு தொடர்பான அத்தகைய தத்துவங் களையும் கடமைகளையும் பிரயோகித்தல், அத்துடன் புரிதல்,

என்பனவாக இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழான அதன் பணி களைப் பிரயோகிப்பதற்காக, கூட்டுத்தாபனத்தால் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் சாத்தியமானவரை பின்வரும் தேவைப்பாடுகளுக்கு, அதா வது,—

(அ) நல்ரசனைக்கு அல்லது நற்பண்புக்கு ஊறு விளைவிப்பதான அல் லது குற்றம் புரிதலுக்குத் தூண்டும், அல்லது ஒழுங்கீனத்துக்கு இட்டுச்செல்லும், அல்லது இன அல்லது மத உளச்சார்புகளுக்கு ஊறுவிளைவிக்கும், அல்லது பொதுமக்களின் உணர்வுகளுக்கு ஊறுவிளைவிப்பதாக இருக்கும் சாத்தியக்கூறுடைய எதுவும், அத்தகைய நிகழ்ச்சி எதிலும் சேர்த்துக்கொள்ளப்படுதலாகாது என்பதான;

(ஆ) நிகழ்ச்சிகளானவை, உள்ளூர், பிராந்திய மற்றும் சர்வதேச சம நிலைப்பாங்கையும், அவற்றின் விடயப்பொருள் தொடர்பில் தகுந்த சமநிலைப்பாங்கையும், அவற்றின் தரம் தொடர்பில் அதி உயர் பொதுத்தராதரமொன்றையும் கொண்டவையாக இருத்தல் என்பதான; அத்துடன்

(இ) நிகழ்ச்சிகளில் வழங்கப்படும் செய்திகள் (அவை எத்தன்மைத் தான படிவத்தினவாயினுஞ்சரி) செம்மை நிலைசார்ந்தனவாக வும், ஓரஞ்சாராப் பாங்குடையனவாகவும் இருத்தல்; அத் துடன் பொதுமக்கள் நலனைத் தகுந்தமுறையில் கருதி வழங்கப் படுதல் என்பனவான,

தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருத்தலைத் திருப்திசெய்து கொள்ளுதல் கூட்டுத்தாபனத்தின் கடமையாதல் வேண்டும்.

8. கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களுள் எல்லாவற்றை யும் அல்லது எதனையும் பிரயோகிக்கலாம் :— கூட்டுத்தாபனத் தின் தத்துவங் கள்.

(அ) தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களை தாபித்தல், நிறுவுதல் அத் துடன் தொழிற்படுத்துதல்;

(ஆ) கொள்வனவுமூலம், குத்தகைமூலம், கீழ்க்குத்தகைமூலம் அல்லது வேறுவகையில், ஏதேனும் காணியை அல்லது காணியிலான அக் கறையை ஏதேனும் கட்டடத்துடன் அல்லது கட்டடமின்றி கொள்ளுதல்;

(இ) ஏதேனும் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் தொடர்பான, அல் லது அதன் தத்துவங்களின் பிரயோகம் தொடர்பான பயன் பாட்டுக்காக, கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான அல்லது

கூட்டுத்தாபனத்தால் நிருவகிக்கப்படுவதான ஏதேனும் காணியின்மீது ஏதேனும் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தை அல்லது ஏதேனும் கட்டடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவுதல், மாற்றஞ்செய்தல், அல்லது மீள நிருமாணித்தல் ;

(ஈ) அமைச்சரது முந்திய அங்கீகாரத்துடன், விற்பனைமூலம், குத்தகைமூலம், கீழ்க்குத்தகைமூலம் அல்லது வேறுவகையில் ஏதேனும் காணியை அல்லது காணியிலான அக்கறையை கையுதிர்த்தல் ;

(உ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமானவையென அது கருதுவதான ஏதேனும் ஆதனத்தை, உரிமைகளை, அல்லது சிறப்புரிமைகளை கொள்வனைமூலம், அல்லது வேறுவகையில் கொள்ளுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை, உரிமைகளை, அல்லது சிறப்புரிமைகளை விற்பனைமூலம் அல்லது வேறுவகையாக கையுதிர்த்தல் அல்லது கூட்டுத்தாபனக் கணக்கீட்டுக்குக் கொணருதல் அல்லது வேறுவகையில் கையாளுதல் ;

(எ) அமைச்சரது முந்திய அங்கீகாரத்துடனும், அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும், வேறு ஏதேனும் தொழிலுடன் கூட்டாகவேனுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி ஒளிபரப்புவதற்கென தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரித்தற் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்தக் கருதியுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி, ஆட்கள் குழுவுக்கு பணத்தை முற்பணமாகக் கொடுத்தல், அல்லது மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் குழுவுக்கு வேறு எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட எவையேனும் முற்பணக்கொடுப்பனவுகள் தொடர்பில் ஏதேனும் உத்தரவாதத்தை, நட்டோத்தரவாதத்தை அல்லது பிணைப்பொறுப்பை வழங்குதல் ;

(ஏ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்ட அமைச்சரது முந்திய அங்கீகாரத்துடன், வேறு ஏதேனும் தொழிலுடன் கூட்டாகவாயினுஞ்சரி, அல்லாதுவிடினுஞ்சரி ஒளிபரப்புவதற்கென தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வழங்குதற் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்தக் கருதியுள்ள, இலங்கையுள் கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, ஏதேனும் கம்பெனியிலான பங்குகளுக்கு, அல்லது பங்குத்தொகுதிகளுக்கு ஒப்பப்பணமளித்தல், அவற்றைக் கொள்ளுதல், வைத்திருத்தல், அத்துடன் கையுதிர்த்தல், அல்லது வேறுவகையில் கையாளுதல் ;

(ஐ) தொலைக்காட்சி ஒளிபரப்பு நோக்கத்தில் சாதாரணமாக உட்சேர்த்துக்கொள்ளப்படுவனவான அத்தகைய கலைகளையும் கலாசார முயற்சிகளையும் அபிவிருத்திசெய்வதிலும், கொண்டுநடாத்துவதிலும் ஊக்குவிக்கும், அத்துடன் உதவும் நோக்கத்

துக்குப் பொருத்தமானதென எண்ணப்படக்கூடியதான அத்தகைய முறையில் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை வசதிகளையும் உபகரணங்களையும் பயன்படுத்துதல்;

(ஒ) அதன் அலுவலர்களின் பயன்பாட்டுக்காக வீடுகளைக் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொள்வனைசெய்தல் அல்லது காணிகளைக் கொள்வனைசெய்து வீடுகளை நிருமாணித்தல்;

(ஓ) கூட்டுத்தாபனத்தால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவைக்குப் பயன்தருவனவென அது கருதக்கூடிய அத்தகைய பருவகாலச் சஞ்சிகைகளை அல்லது வேறு வெளியீடுகளை வெளியிடுதல் அல்லது வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்தல்;

(ஔ) எவ்விளம்பரத்தை தொலைக்காட்சி ஒளிபரப்புச் செய்தல் பொது மக்கள் நலனுக்குகந்ததாக இல்லையோ அவ்விளம்பரம் எதனையும் எவ்வடிவத்திலேனும் தொலைக்காட்சி ஒளிபரப்புச் செய்ய மறுத்தல்;

(க) தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆற்றலை அபிவிருத்திசெய்து முன்னேற்றும் நோக்கத்துக்காக சமுதாய நலனுக்குகந்தவை என கூட்டுத்தாபனம் கருதும் அத்தகைய எல்லாச் செயல்களையும் புரிதல்; அத்துடன்

(ங) மேற்சொல்லப்பட்ட நோக்கங்கள் எவற்றுக்காகவேனும் எவரேனும் ஆளுடன் அல்லது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி, அத்துடன் இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வேறு எந்த இடத்திலாயினுஞ்சரி, ஆட்கள் குழுவுடன் கூட்டுச்சேர்ந்து அல்லது இணைந்து செயற்படுதல்.

## பாகம் III

### கூட்டுத்தாபனப் பணியாட்டொகுதி

9. (1) கூட்டுத்தாபனமானது, அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடன், தொலைக்காட்சி ஒளிபரப்புத்துறையில் தகுதியும் அனுபவமும் வாய்ந்தவரான ஆள் ஒருவரைப் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கலாம்: பணிப்பாளர் தலைமையதிபதி.

ஆயின், கூட்டுத்தாபனமானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், கூட்டுத்தாபனத் தவிசாளரை, அவரது கடமைகளுக்கு மேலதிகமாக பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமைகளையும் புரிவதற்கென நியமிக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், கொள்கை விடயங்களில் கூட்டுத்தாபனத்தின் பொதுவான பணிப்புகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை நெறிப்படுத்தும் பொறுப்பும், கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிக்கும்,

புரியும், அத்துடன் நிறைவேற்றும் பொறுப்பும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் மீதான நிருவாகக் கட்டுப்பாட்டுப் பொறுப்பும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், கூட்டுத்தாபனத்தின் எழுத்திலான அங்கீகாரத்துடன், கூட்டுத்தாபனத்தின் எவரேனும் வேறு ஊழியருக்கு, அவ்வாறு செய்தல் அவசியமென காலத்துக்குக் காலம் அவர் கருதுவதற்கேற்ப, அவரது அத்தகைய தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை எழுத்தில் கையளிக்கலாம்; அத்துடன், அத்தகைய தத்துவங்கள், கடமைகள், அல்லது பணிகள் அவ்வாறு எந்த அவரேனும் ஊழியருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஊழியர் பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைவாக அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தல், புரிதல், அத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதியானவர்—

(அ) அறுபது வயதை அடைவதன்பேரில் பதவியிலிருந்து ஓய்வுபெறுதல் வேண்டும்;

(ஆ) அமைச்சரின் முந்திய அங்கீகாரத்துடன், எந்நேரத்திலேனும் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் தற்காலிகமாக இலங்கையில் இல்லாமலிருந்தால், அல்லது உடல்நலமின்மை அல்லது வேறு தகைமையின்மை காரணமாக தற்காலிகமாக அவரது பதவிக்குரிய கடமைகளை புரிவதற்கு இயலாதவராகவிருந்தால், அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடன், பணிப்பாளர் தலைமையதிபதி கடமைகளைத் திரும்பவும் பொறுப்பேற்கக்கூடியவராக வரும்வரையில் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென, கூட்டுத்தாபனத்தினால் இன்னோர் ஆள் நியமிக்கப்படலாம்.

நிதி முகாமையாளர்.

10. (1) கூட்டுத்தாபனம் தகைமைபெற்ற, தகுதிவாய்ந்த, அனுபவமுள்ள ஆள் ஒருவரை நிதி முகாமையாளராக நியமிக்கலாம்.

(2) கூட்டுத்தாபனமானது பத்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத தொகைகள் தொடர்பிலான நிதி அடிப்படைசார் முடிபெதனையும், அச்செலவினத்தின் நிதிசார்பம்சங்கள் அனைத்தையும் குறிப்பிட்டுக்காட்டி நிதி முகாமையாளர் நிதிப் பகுப்பாய்வொன்றைச் சமர்ப்பித்தாலன்றி, மேற்கொள்ளுதலாகாது.

அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.

11. (1) கூட்டுத்தாபனமானது அதன் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதுவதற்கேற்ப, அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரின் சம்மதத்துடனும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சுச் செயலாளரின் சம்மதத்துடனும், அதையொத்த சம்மதத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்

பகுதிக்கு கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன், அவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரேனும் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்தின் மாட்டு சேவை புரிவதற்கு உடன்பட்டுக்கொண்டுள்ளவரான எவரேனும் ஆளை கூட்டுத்தாபனம் ஊழியத்திலமர்த்துகின்றவிடத்து, அந்த ஆளினால் கூட்டுத்தாபனத்தின்மாட்டு புரியப்பட்ட சேவைக்காலமெதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்தின் பொருட்டு அரசாங்கத்தின்மாட்டு புரியப்பட்ட சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) கூட்டுத்தாபனத்தின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள உறுப்பினர் எவரேனும் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் வேறு அலுவலர் அல்லது சேவையாளர் எவரேனும், விடயத்துக்கேற்ப, அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடனும், அத்துடன் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின் சம்மதத்துடனும், அதையொத்த சம்மதத்துடன் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதையொத்த சம்மதத்துடன், கூட்டுத்தாபனத்தினாலும், விடயத்துக்கேற்ப, உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினாலும் அல்லது அவ்வுள்ளூரதிகார சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான, ஓய்வூதிய அல்லது சகாய நிதி உரிமைகள் தொடர்பிலான நியதி, நிபந்தனைகள் உட்பட, அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மேல் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) கூட்டுத்தாபனத்தின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடனும், அந்தப் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் சம்மதத்துடனும், அதையொத்த சம்மதத்துடன் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதையொத்த சம்மதத்துடன், கூட்டுத்தாபனத்தினாலும் சொல்லப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான ஓய்வூதிய அல்லது சகாய நிதி உரிமைகள் தொடர்பிலான நியதி, நிபந்தனைகள் உட்பட, அத்தகைய நியதி நிபந்தனைகளின்மேல் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) ஆறும் அல்லது (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு எவரேனும் ஆள் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினருக்கு இருப்பதுபோன்ற அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைவானவராக இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதி தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

12. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனமானது—

(அ) கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதியினரை பதவி விலக்கலாம், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதியினர் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் ;

(ஆ) அத்தகைய பணியாட்டொகுதியினரது கூலிகளை, அல்லது சம்பளத்தை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதிகள், நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நலன் கருதி சகாய நிதி அல்லது திட்டங்கள் என்பனவற்றைத் தாபித்து ஒழுங்குசெய்யலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் நிதி அல்லது திட்டம் என்பவற்றுக்கு உதவுதொகைகளும் வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் ஏதேனும் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

## பாகம் IV

## நிதி

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

13. (1) கூட்டுத்தாபனம் அதற்கெனச் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் வாக்களிப்புச் செய்யப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் காலத்துக்குக் காலம் கூட்டுத்தாபனத்துக்கு முற்பணமாக வழங்கப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் கிடைக்கப்பெறும் எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) தொலைக்காட்சி உரிமங்களை வழங்குவதற்கெனவும் மீளப் புதுப்பித்தற்கெனவும் தொலைத்தொடர்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஒவ்வோராண்டிலும் கிடைக்கப்பெறும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாக் கட்டணங்களும் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தால் அத்தகைய நிதியத்தின்பால் செலுத்தப்பட வேண்டியவையென இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்ட வேறு எல்லாப் பணத்தொகைகளும்,

கூட்டுத்தாபனத்தின் நிதியத்துட் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியத்திலிருந்து கொடுபடவேண்டியவையெனத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து கொடுபடுதல் வேண்டும்.

14. (1) கூட்டுத்தாபனமானது, அமைச்சரின் சம்மதத்துடனும், அவர் பொருத்தமானவையெனக் கருதும் அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும், மேலதிகப் பற்றுவகையாக அல்லது வேறு வகையாக, இச்சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகளைப் புரிவதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனத்துக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய தொகைகளைத் தற்காலிகமாகக் கடன் வாங்கலாம் : கடன்வாங்குதற் தத்துவங்கள்.

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தால் பெறப்படுபவையான எவையேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் செலுத்துமதி நிலுவையாக உள்ள தொகைகளின் கூட்டுமொத்தமானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை விஞ்சுதலாகாது.

(2) கூட்டுத்தாபனமானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்டதான அமைச்சரின் சம்மதத்துடன், பின்வரும் நோக்கங்கள் எவற்றுக்காகவேனும், இதனகத்துப்பின்னர் "தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனப் பங்குத்தொகுதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான பங்குத் தொகுதிகளை வழங்குவதன்மூலமான தற்காலிகக் கடன்வகையிலல்லாத வேறுவகையில் பணத்தைக் கடன்வாங்கலாம். அந்நோக்கங்களாவன :—

(அ) தொலைக்காட்சி ஒளிபரப்புதல் அத்துடன் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் என்பவற்றுக்குத் தேவைப்படுவதான ஏதேனும் சாதனத்தினை நிறுவுதல், தாபித்தல், இயக்குதல் அத்துடன் பேணுதல் என்பனவான ஏதேனும் வேலை தொடர்பில் உறப்பட்ட எவையேனும் செலவினங்களைப் பொறுத்துக்கொள்வதற்கான பண ஏற்பாடுகள் ;

(ஆ) மேலே கூறப்பட்ட நோக்கங்களுக்காக ஏதேனும் காணியை அல்லது காணியிலான அக்கறையைக் கொள்ளுதல்;

(இ) கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதியை அல்லது பெறப்பட்ட ஏதேனும் கடனை மீட்டல்;

(ஈ) ஓராம் உட்பிரிவின்கீழ் தற்காலிகமாகக் கடன்வாங்கப்பட்டதான ஏதேனும் பணத்தை திருப்பிக் கொடுத்தல்.

(3) தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனப் பங்குத்தொகுதியானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்டதான அமைச்சரது அங்கிகாரத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க, வழங்கப்படுதல், கைமாற்றஞ்செய்யப்படுதல், கையாளப்படுதல், அத்துடன் இல்லாதாக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனப் பணங்களை முதலீடு செய்தல்.

15. இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாகத் தேவைப்படாதவையான கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணங்களும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் அல்லது அத்தகைய பிணைப்பொறுப்புக்களில் கூட்டுத்தாபனத்தால் முதலீடு செய்யப்படலாம். கூட்டுத்தாபனமானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்டதான அமைச்சரின் அங்கிகாரத்துக்கு அமைவாக, தொலைக்காட்சி ஒளிபரப்புடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட அத்தகைய செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட முதலீடுகளைச் செய்யலாம்.

கூட்டுத்தாபன நிதி ஆண்டும் கூட்டுத்தாபனக் கணக்குகளின் கணக்காய்வும்.

16. (1) கூட்டுத்தாபனத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வரவு, செலவு, இருப்புக்கள், பொறுப்புக்கள் அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய சரியான கணக்குப் புத்தகங்கள் பேணிவரப்படச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பிலான, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனக் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

ஒளிபரப்புவதற்கென தொலைக்காட்சி நிகழ்ச்சிக் கருவூலங்களை தயாரிப்பதிலும் சந்தைப் படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள ஆட்களைப் பதிவு செய்தல்.

17. (1) நியமித்த தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆள் எவரும், அவர் இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறாக கூட்டுத்தாபனத்தில் தம்மைப் பதிவு செய்துகொண்டிருந்தாலன்றி, ஒளிபரப்புவதற்கென தொலைக்காட்சி நிகழ்ச்சிக் கருவூலங்களை தயாரிப்பதிலும் சந்தைப்படுத்துவதிலும் ஈடுபடுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், நியமித்த தேதிக்கு முன்னர் அத்தகைய தயாரிப்பிலும் சந்தைப்படுத்தலிலும் ஈடுபட்டுள்ளவரான எவரேனும் அத்தகைய ஆள், அவ்வாறு தம்மைப் பதிவுசெய்து கொள்ளாது, நியமித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய உற்பத்தியிலும் சந்தைப்படுத்தலிலும் ஈடுபடலாம்.

(2) பதிவுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன், விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஆவணங்களும் அத்தகைய கட்டணமும் அத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனமானது, விடயத்துக்கேற்றாற்போல, விண்ணப்பகாரர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆள் பொதுமக்கள் நலன் கருதி தேவைப் படுத்தப்படும் தராதரங்களைப் பேணுவதற்கு இயலாதவராக இருந்தால், (2) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல் விண்ணப்ப காரரைப் பதிவுசெய்ய மறுக்கலாம், அல்லது இருந்துவரும் ஒரு பதிவை இல்லாதாக்கலாம்.

(4) இச்சட்டத்தின்கீழ் ஏவரேனும் ஆள் பதிவுசெய்து கொள்ளப்பட்டுள்ளவிடத்து, கூட்டுத்தாபனமானது விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான பதிவுச்சான்றிதழ் ஒன்றினை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தராதரங்களை உறுதிசெய்வதற்கென விதித்துரைக்கப்படக் கூடிய நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின்கீழ் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டவரான எவரேனும் ஆள், அதன்கண் தரப்பட்ட எவையேனும் நிபந்தனைகளை மீறிச் செயற்படுமிடத்து, கூட்டுத்தாபனமானது அவரது சான்றிதழை இல்லாதாக்கும் கட்டளையொன்றினை ஆக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றினால் இடருற்றவரான எவரேனும் ஆள், இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான அமைச்சின் அமைச்சுக்கான செயலாளருக்கு, கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுள் அதற்கு எதிராக மேன்முறையீடுசெய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீதான செயலாளரது முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் ஊழியர்களைப் காப்புறுதி செய்யலாம்.

**18.** கூட்டுத்தாபனமானது, காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தின் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது கடமை பிரயோகிக்கப்படுகையிலும் அல்லது புரியப்படுகையிலும், பிரயோகிக்கப்படுவதிலிருந்தும் அல்லது புரியப்படுவதிலிருந்தும் எழும் சொந்த விபத்துக்கு எதிராக கூட்டுத்தாபன ஊழியர்களைக் காப்புறுதிசெய்யும் காப்புறுதி ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலாம்; அத்துடன், அத்தகைய எவையேனும் ஒப்பந்தங்கள் தொடர்பில் கொடுபடற்பாலதான கட்டுப்பணத்தை கூட்டுத்தாபனம் செலுத்தலாம். அவ்வாறு காப்புறுதி செய்யப்படுவதற்கான ஊழியர்களின் வகுதிகள் அத்தகைய வகுதிகளைச் சார்ந்த ஊழியர்களினால் மேற்கொள்ளப்படும் அபாயத்தைக் கருத்திற்கொண்டு கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது கூட்டுத்தாபனத்தினது பணிப்பின்மீது செய்யப்பட்ட செயலுக்கான பாதுகாப்பு.

19. (1) தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும்—

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் கூட்டுத்தாபனத்தினால் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் கூட்டுத்தாபனத்துக்கு எதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது கூட்டுத்தாபனத்தினது பணிப்பின் மீது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் அவருக்கெதிராக,

எழுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்துக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் கூட்டுத்தாபனத்தின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவரான எவரேனும் அத்தகைய ஆளுக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது கூட்டுத்தாபனத்தின் பணிப்பின் மீது அவரால் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகளானவை, அத்தகைய செலவுகள் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் புரியப்பட்டது என நீதிமன்றம் தீர்த்தால், கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்துக்காக அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல்.

20. கூட்டுத்தாபனத்தின் எவையேனும் அலுவல்கள் தொடர்பான நோக்கத்துக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படவேண்டியிருந்து, அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அங்கீகரிக்குமிடத்து, அவ்வாதனமானது ஒரு பகிரங்க நோக்கத்துக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு சபைக்குக் கைமாற்றவும் படலாம்.

**21.** அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், கூட்டுத்தாபனத்தின் நோக்கத்துக்காக அரசின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் உடைமையையும், பயன்பாட்டையும் கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றஞ்செய்து உரித்தாக்கலாம்:

அரசின் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக் கூடிய தாக்குதல்.

ஆயின், எவ்வாறாயினும், அரச காணிகள் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைப் பாதிப்பதான கட்டளையெதுவும் அமைச்சரால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படுதலாகாது:

ஆயின், மேலும், அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தைப் பாதிப்பதான கட்டளையெதுவும், அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி, அமைச்சரால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படுதலாகாது.

**22.** அமைச்சர், காலத்துக்குக் காலம், கூட்டுத்தாபனத்தின் கடமைகள் புரியப்படுதல் தொடர்பிலும், தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் தொடர்பிலும் எழுத்தில் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை வழங்கலாம்; அத்துடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் கூட்டுத்தாபனத்தின் கடமையாதல் வேண்டும்.

அமைச்சர் பணிப்புகளை வழங்குதல்.

**23.** கூட்டுத்தாபனத்துக்கு எதிராகக் கொண்டுவரப்படும் வழக்கு எதிலும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவருக்கு எதிரான, உடலுக்கெதிரான அல்லது ஆதனத்துக்கெதிரான எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

சபையின் உறுப்பினரது உடலுக்கு எதிராகவோ அவரின் ஆதனத்துக்கு எதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

**24.** (1) கூட்டுத்தாபனத்தின் சார்பிலான ஒப்பந்தங்கள் பின்வருமாறு ஆக்கப்படலாம்:—

ஒப்பந்தங்கள்.

(அ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டால் எழுத்தில் இருத்தல் வேண்டும் என சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுவதான ஒப்பந்தமொன்று கூட்டுத்தாபனத்தின் சார்பில் கூட்டுத்தாபனத்தின் பொது இலச்சினையின்கீழ் எழுத்தில் செய்யப்படலாம்;

(ஆ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டால் பொறுப்பு சுமத்தப்படுவோரான திறத்தவர்களால் ஒப்பமிடப்பட்டு எழுத்தில் இருத்தல் வேண்டும் என சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுவதான ஒப்பந்தமொன்று கூட்டுத்தாபனத்தின் சார்பில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அதற்கென முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் ஒப்பமிடப்பட்டு, எழுத்தில் செய்யப்படலாம்; அத்துடன்

(இ) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே வாய்மொழிமூலம் மட்டும் செய்யப்பட்டு எழுத்தில் வடிக்கப்படாததாக இருந்தாலும் சட்டப்படி செல்லுபடியாவதான ஒப்பந்தமொன்று கூட்டுத்தாபனத்தின் சார்பில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அதற்கென முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களால் கூட்டுத்தாபனத்தின் சார்பில் வாய்மொழிமூலம் செய்யப்படலாம்.

(2) இப்பிரிவுக்கிணங்கச் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்று சட்டப்படி பயனுறுதல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தையும், அவ்வொப்பந்தத்துக்கான வேறு எல்லாத் திறத்தவர்களையும் பிணிப்பதாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவுக்கிணங்கச் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்று எந்த முறையில் செய்யப்படலாம் என இப்பிரிவினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அதே முறையில் வேறுபடுத்தப்படலாம் அல்லது விடுவிக்கப்படலாம்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட கூட்டுத்தாபனம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் எனக் கருதப்படுதல்.

25. கூட்டுத்தாபனமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அச்சட்டத்தின் ஏற்பாடுகள் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

26. தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதிகள்.

27. (1) எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுதல் இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ, அக்கருமங்கள் எல்லாமும் தொடர்பில் அல்லது எவையேனும் தொடர்பில் கூட்டுத்தாபனம் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதியெதுவும், அது அமைச்சரால் அங்கிகரிக்கப்பட்டு அத்தகைய அங்கிகாரம் பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதலாகாது.

தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களை நடாத்திவருவதன்மீதான தடை.

28. (1) இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனமல்லாத ஆளெவரும், அத்தகைய ஆள் அமைச்சரிடமிருந்து உரிமமொன்றைப் பெற்றிருந்தாலன்றி, தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையமொன்றை நடாத்தி வருதலாகாது.

(2) அமைச்சரானவர், கூட்டுத்தாபனத்துடனான கலந்தாலோசனையின் பேரில், தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையமொன்றைத் தாபிப்பதற்கும் நடாத்திவருவதற்கும் ஆன உரிமமொன்றை ஆளெவருக்கும் வழங்கலாம்.

(3) உரிமமொன்றுக்கு விண்ணப்பிப்பவரான ஆள் தனியார் ஒளிபரப்பு நிலையமொன்றைத் தாபித்து, நடாத்திவரும் நோக்கத்துக்கு நியாயமாகத் தேவைப்படுவனவான அத்தகைய தொழில்நுட்ப, நிதிசார், உயர்தொழிற் தகைமைகளைக் கொண்டிருக்கிறார் என அமைச்சர் திருப்தியடைந்தாலன்றி, அமைச்சரால் உரிமமெதுவும் வழங்கப்படுதலாகாது.

தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடர்பான கருமங்களில் கூட்டுத்தாபனத்துக்கு மதியுரை வழங்குவதற்கென குழுக்களைத் தாபித்தல்.

**29.** (1) அமைச்சரானவர், தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடர்பில் கூட்டுத்தாபனத்தால் குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய கருமங்கள்மீது கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஒரு அல்லது ஒன்றுக்கு அதிகமான ஆலோசனைக் குழுக்களைத் தாபிக்கும் நோக்கத்துக்கென ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஆலோசனைக் குழுவின் அல்லது குழுக்களின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தினை விதித்துரைக்கலாம்.

தவறுகள்.

**30.** (அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது அதன் நோக்கங்களுக்காக ஆக்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் அல்லது வேறு ஆவணத்தில் பொய்யான அல்லது செப்பமற்ற கூற்றினை அறிந்துகொண்டு ஆக்குபவரான ; அல்லது

(ஆ) அவரால் கொடுத்துதவப்படுதல் வேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது விவரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறும் அல்லது மறுக்கும் ; அல்லது

(இ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ், அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் அல்லது ஒழுங்குவிதியின்கீழ் ஏவரேனும் அலுவலருக்கு வழங்கப்பட்ட அல்லது அலுவலரின் மேல் சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவம் பணி, அல்லது கடமை பிரயோகிக்கப்படுதலின் போது, நிறைவேற்றப்படுதலின்போது அல்லது புரியப்படுதலின்போது அவரை வேண்டுமென்று தடுக்கும் அல்லது தடைசெய்யும் ; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டினை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற,

ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்

**31.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் எல்லாமும் தொடர்பில் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் இயன்றளவு விரைவாகக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாதுவிடப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் வலிதுடைமைக்குப் பங்கமின்றி, அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமோ அத்தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

32. சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, இச்சட்டத்தில்—

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட எனப் பொருளாகும்;

"தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம்" என்பது, கூட்டுத்தாபனமல்லாது, எவரேனும் வேறு ஆளினால் தாபிக்கப்படும் அல்லது தொழிற்படுத்தப்படும் தொலைக்காட்சி நிலையமெனப் பொருளாகும்;

"தொலைக்காட்சி ஒளிபரப்பு" என்பது, வடத் தொலைக்காட்சி ஒளிபரப்பினை உள்ளடக்குவதாகும், ஆனால் வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பை உள்ளடக்காது;

"தொலைக்காட்சி நிகழ்ச்சி" அல்லது "நிகழ்ச்சிகள்" என்பது, பொதுமக்களால் நுகரப்படுவதற்கென தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் ஒன்றிலிருந்து ஒளிபரப்பப்பட்ட அல்லது ஒளிபரப்புவதற்கெனக் கருதப்பட்ட ஏதேனும் சைகை, அறிவிப்பு, விடயதானம், தொடர்பு, படம் அல்லது வேறு விடயத்தை உள்ளடக்கும்.